## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.96-2022** **L.W.4** **P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செல்வதுரை | Father / Husband Name | நடராஜன் |
| Village | சிறுமங்கலம் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 70 |
| | | Time | 3.40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 11.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1, 2 எதிரிகள் ஆஜர், 3 எதிரி ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜர்.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

நான் சிறுமங்கலத்தில் வசித்து விவசயா வேலைசெய்து வருகிறேன். எனக்கு அசா.1, முதல் அசா.3 ஆகியோரை தெரியும். பட்டியல் சாட்சிகள் 5, 6, ஆஜர் எதிரிகள், 3 வது எதிரி தனம் ஆகியோரை தெரியும், ஊர்க்காரர்கள். ( மூன்றாவது எதிரி ஆஜரில்லை), கடந்த 26–06–2021 அன்று காலை 9.00 மணிக்கு காட்டிற்கு அதாவதுசெல்லியம்மன்கோவில் பக்கத்தில் உள்ள காட்டிற்குசென்றுவிட்டு 9.30 மணிக்கு திரும்பி வரும்போது சிறுமங்கலத்திலிருந்து ஆஜர்எதிரிகள் இருவரும் அவர்களின் வீட்டிலிருந்து அவர்களுடைய கொல்லைக்கு வந்தார்கள் வரும்போதே அசா.1 செல்வம் வாத்தியார் அவருடைய கொல்லைக்கு வந்தார். இருவர்களுடைய கொல்லையும் பக்கத்து பக்கத்தில் உள்ளது அப்போது வாத்தியார் வந்தபோது ஆஜர் எதிரிகள் மறித்து செல்வம் வாத்தியாரை கட்டையால் வலது பக்ககையை வைத்து பின் பக்க மண்டையில் அடித்தார், கம்பியை கையில்வைத்திருன்தார் என்றார்( இதை சாட்சி கையை வைத்து அடையாளம் காட்டினார்). அப்புறம் வாத்தியார் கீழேவிழுந்து விட்டார் ஆஜர்எதிரிகள் இருவரும் காலால் நெஞ்சுக்கு நேராக எட்டி உதைத்தார்கள் அதன்பிறகு வாத்தியார் கீழேவிழுந்தவர் எழுந்து வீட்டிற்கு வந்துவிட்டார். அங்கிருந்தால் அடித்துவிடுவார்கள் என்று. அதன்பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 26–06–2021 ம் தேதி காலை 9.30 மணிக்கு அ.சா.1 பன்னீர்செல்வம் அவருடைய வயலுருக்கு சென்றதாகவும் அங்கு வந்த ஆஜர் எதிரிகள், எதிரி தனம் மூவரும் அசா்.1 ஐ தேவடியா பயலே, குச்சிகாரி பயலே என திட்டினார்கள் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா

என்றால் ? ஆமாம்.

2. ஆஜர் 1 வது எதிரி கொக்கியால் அவருடைய வலது பின்ன பக்க தலையில் அடித்தார் என்று என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? நான் அதை பாாக்கவில்லை.

3. உடம்பில் எட்டி உதைத்தார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? ஞாபகமில்லை.

4. அவர் பயந்து வீட்டிற்கு சென்று வீட்டை பூட்டி விட்டதாகவும் மூவரும் வீட்டை தட்டிகிட்டு கொண்டிருக்கும்போதே அசா.1 வீட்டின் பின்ன பக்க கதவின் வழியாக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கும் மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கும்சென்றதாக என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? போலிஸார் என்னிடம் கேட்கவும் இல்லை நான் சொல்லவும் இல்லை ஆனால் அவர் திட்டக்குடிஅரசு மருத்துவமனைக்குசென்றார்.

5. தனக்கும், அ.சா.2, அசா.3 ஆகிய முவருக்கும் தெரியும் என்றும்நேரில் பார்த்தோம் என்று போலிஸாரின் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ? ஆமாம்.

6. மேற்ச்சொன்ன 2 முதல் 4 சங்கதியை அரசுதரப்பின் முதல் விசாரணையில் சொல்லாதற்கு காரணம் வயதாகிவிட்டதாலும், சிறிது ஞாபக மறதியினாலும் சொல்லவில்லை என்றால் ? இருக்கலாம்.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.96-2022** **L.W.3** **P.W.3**

| Name | திரு.செல்வராஜ் | Father / Husband Name | சிவப்பிரகாசம் |
|---|---|---|---|
| Village | சிறுமங்கலம் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 63 |
| | | Time | 3.30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 11.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1, 2 எதிரிகள் ஆஜர், 3 எதிரி ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் சிறுமங்கலத்தில் வசித்து விவசயா வேலைசெய்து வருகிறேன். எனக்கு அசா.1, அ.சா.2 ஆகியோரை தெரியும். பட்டியல் சாட்சிகள் 4 முதல் 6, ஆஜர் எதிரிகள், 3 வது எதிரி தனம் ஆகியோரை தெரியும், ( மூன்றாவது எதிரி ஆஜரில்லை), கடந்த 26–06–2021 சம்பவம் நடந்த அன்று சுமார் காலை 9.30 மணிக்கு நாங்கள்மோட்டார் சைக்கிளில் வந்துக்கொண்டிருந்தேன் அப்போது அப்போது ராமசாமி, சின்னப்பிள்ளை, தனம் ஆகியோர் பன்னீர்செல்வத்தை கீழேபோட்டு அடித்துக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு அசா.1 பன்னீர்செல்வம் அடி தாங்க முடியாமல் வீட்டிற்கு ஓடி சென்றுவிட்டார். அதன்பிறகு எதிரிகள் அசா.1 பன்னிர் செல்வத்தின் வீட்டிற்குசென்று அவரிம் சண்டை பிடித்தார்கள் மீண்டும் எதிரிகள் அசா.1 டம் நீவாடா நீ கொல்லையில வந்து பயிர் இடுவ தை பார்த்துக்கொள்கிறேன் வாடா என்று எதிரிகள் சொன்னார்கள். பன்னீர்செல்வம் காவல் நிலையம் சென்றுவிட்டார் நாங்கள்வந்துவிட்டோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 26–06–2021 ம் தேதி காலை 9.30 மணிக்கு அ.சா.1 பன்னீர்செல்வம் அவருடைய வயலுருக்கு சென்றதாகவும் அங்கு வந்த ஆஜர் எதிரிகள், எதிரி தனம் மூவரும் அசா.1 ஐ தேவடியா பயலே, குச்சிகாரி பயலே என திட்டி ஆஜர் 1 வது எதிரி உருட்டு கட்டையால், கொக்கியால் அவருடைய வலது பின்ன பக்க தலையில் அடித்ததாகவும் உடனே அவர் சத்தம் போட்டதாகவும் மூவரும் சேர்ந்து அவரை நெஞ்சு மற்றும் உடம்பில் எட்டி உதைத்ததாகவும் அவர் பயந்து வீட்டிற்கு சென்று வீட்டை பூட்டி விட்டதாகவும் மூவரும் வீட்டை தட்டிக்குகொண்டிருக்கும்போதே அசா.1

வீட்டின் பின்ன பக்க கதவின் வழியாக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கும் மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கும்சென்ற விபரங்களை தனக்கும் பட்டியல்சாட்சிகள் செல்வராஜ், செல்லதுரை ஆகிய முவருக்கும் தெரிய்ம் என்றும்நேரில் பார்த்தோம் என்று போலிஸாரின் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** ஆமாம், உண்மை.

**2.** மேற்ச்சொன்ன சங்கதியை அரசுதரப்பின் முதல் விசாரணையில் சொல்லாதற்கு காரணம் வயதாகிவிட்டதாலும், சிறிது ஞாபக மறதியினாலும் சொல்லவில்லை என்றால் **?** ஆமாம் எனக்கு சிறிது ஞாபக மறதி இருந்தது.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.</u>**

**CC.No.96-2022 L.W.2 P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராமச்சந்திரன் | Father / Husband Name | நல்லசிவம் |
| Village | சிறுமங்கலம் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 71 |
| | | Time | 3.15 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 11.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1, 2 எதிரிகள் ஆஜர், 3 எதிரி ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜர்.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

நான் சிறுமங்கலத்தில் வசித்து கடந்த 31–01–2012 ம் வருடம் பெண்ணாடம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வுப்பெற்று மேற்ச்சொன்ன அதே முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு அசா.1 பன்னீர்செல்வம் மருமகன்முறையாவார். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 6, ஆஜர் எதிரிகள், 3 வது எதிரி தனம் ஆகியோரை தெரியும், ( மூன்றாவது எதிரி ஆஜரில்லை), கடந்த 26–06–2021 சம்பவம் நடந்த அன்று சுமார் காலை 9.30 மணிக்கு எங்கள் ஊர் செல்லியம்மன்கோவிலுக்கு சென்றுவிட்டு வந்துக்கொண்டிருந்தேன் அப்போது அசா.1 பன்னீர்செல்வம் என்பவரை சின்னப்பிள்ளை, ராமசாமி, தனம் ஆகிய மூவரும் அசா.1 கூர்மையான கம்பி, தடியால் மேலே அடித்துக்கொண்டிந்தார்கள் நான் அந்தப்பக்கமாக சென்றுவிட்டேன் அவர் கீழேவிழுந்து விட்டார். பின்னர் அடிவாங்கிட்டு அவர் வீட்டிற்,கு சென்றுவிட்டார். அன்று மாலையே திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்குசென்றார், அவருக்கு அதிகமாக காயங்கள்ஏற்பட்டதால் சிகிச்சை மேற்க்கொண்டார் மறுநாள் காலை காவல் நிலையதம்சென்றுபுகார் கொடுத்தார் போலிஸார் விசாரித்தனர்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1.கடந்த 26–06–2021 ம் தேதி காலை 9.30ம ணிக்கு அ.சா.1 பன்னீர்செல்வம் அவருடைய வயலுருக்கு சென்றதாகவும் அங்கு வந்த ஆஜர் எதிரிகள், எதிரி தனம் மூவரும் அசா.1 ஐ தேவடியா பயலே, குச்சிகாரி பயலே என திட்டி ஆஜர் 1 வது எதிரி உருட்டு கட்டையால், கொக்கியால் அவருடைய வலது பின்ன பக்க தலையில் அடித்ததாகவும் உடனே அவர் சத்தம் போட்டதாகவும் மூவருமத் சேர்ந்து அவரை நெஞ்சு மற்றும் உடம்பில் எட்டி உதைத்ததாகவும் அவர் பயந்து வீட்டிற்கு

சென்று வீட்டை பூட்டி விட்டதாகவும் மூவரும் வீட்டை தட்டிக்குகொண்டிருக்கும்போதே அசா.1 வீட்டின பின்ன பக்க கதவின் வழியாக திட்டக்குடி அரசு மருத்துவமமைனக்கும் `மேல் சிகிச்சைக்க்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கும்சென்ற விபரங்களை தனக்கும் பட்டியல்சாட்சிகள் செல்வராஜ், செல்லதுரை ஆகிய முவருக்கும் தெரிய்ம் என்றும்நேரில் பார்த்தோம் என்று போலிஸாரின் விசாரணையில்  சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ? ஆமாம்.

2. மேற்ச்சொன்ன சங்கதியை அரசுதரப்பின் முதல் விசாரணையில் சொல்லாததற்கு காரணம் வயதாகிவிட்டதாலும், சிறிது ஞாபக மறதியினாலும் சொல்லவில்லை என்றால் ? ஆமாம் எனக்கு சிறிது ஞாபக மறதி இருந்தது.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.96-2022** **L.W.1** **P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பன்னீர்செல்வம் | Father / Husband Name | செல்லவேல் |
| Village | சிறுமங்கலம் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 54 |
| | | Time | 3.00 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 11.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1, 2 எதிரிகள் ஆஜர், 3 எதிரி ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் சிறுமங்கலத்தில் வசித்து மதுரவள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 ராமச்சந்திரன் எனது உடன்பிறந்த அண்ணனின் மாமனார் ஆவார். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 6 வரையுள்ளவர்கள் எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகள் இருவர் மற்றும் இரணடாவது எதிரி சின்னப்பிள்ளையின்மனைவி மூன்றாவது எதிரி தனம் அவரையும் தெரியும். ( மூன்றாவது எதிரி ஆஜரில்லை). கடந்த 26–06–2021 ம்தேதி காலை 9.30 மணிக்கு செல்லியம்மன்கோவில் வழியாக என்னுடைய வயலுக்கு போயிக்கொண்டிருந்தேன் செல்லியம்மன்கோவில் தாண்டியவுடன் ஆஜர் எதிகள் மற்றும் தனம் மூன்று எதிரிகளும் என்னை பார்த்து தேவடியா பயலே கொல்லாமல் விடமாட்டேன், நிலத்தைஅளக்க விடமாட்டேன் உண்னை என்று சொல்லி 1 வது எதிரி ராமசாமி உருட்டு கட்டை.யை எடுத்து வலது பக்க பின் மண்டையில் அடித்தார். ( சாட்சி கையை வைத்து அடையாளம். காட்டினார்). 1 வது எதிரி ராமசாமி உருண்டை.யான கொக்கி போன்ற கம்பியை எடுத்து எனது பின் பக்க மண்டையில் அடித்தார். ( சாட்சி கையை வைத்து அடையாளம். காட்டிடினார்) நான் கையால் தடுத்துவிட்டேன் அதன்பிறகு இரண்டாவது எதிரி சின்னபிள்ளை, மூன்றாவது எதிரி தனம் இருவம் காலால் எட்டி உதைத்து கல்லால் அடித்தார்கள். அதன்பிறகு வலி தாங்க முடியாமல் வீட்டை நோக்கி ஓடிவந்துவிட்டேன். வீட்டிற்கு வந்தப்பிறகும் இவ்வழக்கின் எதிரிகள் மற்றும் மல்லிகா ஆகியோர் என்னை ஆபாசமான வார்த்தை, தேடிவயா பயலே உன்கொல்லையை அளக்கவிடமாட்டேன் என்று சொல்லி என்னை அடிச்சாங்க நான் வீட்டிற்குள்போய் கதவைசாத்திவிட்டேன் அதன்பிறகும் வீட்டு கதவை தட்டிகிட்டு திட்டிகிட்டு இருந்தாங்கள். அதன் பிற,கு நான் பயந்துகொண்டு தலையில்இருந்த ரத்தம்வந்துகொண்டிருந்தது திட்டக்குடி அரசு மருத்துவமனையிலர் சிகிச்சைக்கு வந்து

சேர்ந்துவிட்டேன். மருத்துவமனையில் என்னை சிகிச்சையில்வைத்துக்கொண்டிருந்தனர் பின்னர் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள் நான் இதற்கிடையில் புகார்கொடுத்துவிட்டு செல்வதாக சொல்லி ஆவினங்குடி காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தேன். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு நான் கொடுத்ததுதான் அது **அசா.ஆ.1** ஆகும். போலிஸார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில்சாட்சி சம்பவத்தை சாட்சி புகாரிலும், போலிஸாரின் விசாரணையிலும் போலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு எதிரிக்கு பவ்வியப்பட்டு மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ்சாட்சியாக பாவிக்க கோரினார் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய ச.பி 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) கீழ் குறுக்கு விசாரணை**

1. வழக்கின் சம்பவத்தில் ஆஜர் 2 வது எதிரி சின்னப்பிள்ளை, 3 வது எதிரி தனம் இருவரும் நான் கீழேவிழுந்ததும் 1 வது எதிரியும் சேர்ந்து மூன்றுபேரும் மாறிமாறி உதைத்து நெஞ்சு மற்றும் மார்பிலும் கீழேகிடந்த கற்களை வீசி எறிந்தார்கள் என்று புகாரிலும், போலிஸாரின் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றுசொன்னால் ? ஆமாம்.

2. மேற்ச்சொன்ன சங்கதிகள்அரசு தரப்பின்முதல் விசாரணையில் சொல்லாததற்கு காரணம் இவ்வழக்கில் அதிகாமாக பாதிக்கப்பட்ட நபர் என்பதால் முழு மையாக விலக்கி சொல்ல முடியவில்லை என்று சொன்னால் ? ஆமாம்.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI